# இப்பாகமுவ பிரதேச சபை

# குருநாகல் மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 23 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 27 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 11 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையில் 1.3.3, 1.3.5 மற்றும் 1.3.6 ஆகிய பந்திகளில் குறிப்பிட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக் கொள்ளமுடியாதுள்ளேன். அதற்கிணங்க இந் நிதிக் கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

--------------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நூலகப் புத்தகங்களின் மீதி ரூபா 6,017,816 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 10,640,537 என ரூபா 4,622,721 இனை மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நூலகப் புத்தகங்கள் கொள்வனவு செய்தல் மற்றும் நன்கொடைகள் ரூபா 145,560 இனை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) ஆண்டிற்கான ரூபா 18,286,108 நிர்மாண வேலை கடன்பட்டோர் மீதியினை கணக்கீடு செய்யப்படாமையால் மூலதன பெறுவனவுகள் மற்றும் நிர்மாண வேலை கடன்பட்டோர் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு குத்தகை (5∴23) பில் போடப்பட்டவைகள் ரூபா 6,747,440 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 5,866,042 என ரூபா 881,398 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான கடைவாடகை (5∴22) பில் போடப்பட்டவைகள் ரூபா 879,000 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 1,143,698 என ரூபா 264,698 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) ஆண்டிற்கான வீதவரி (1∴11) பில் போடப்பட்டவைகள் ரூபா 1,896,116 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 3,558,915 என ரூபா 1,662,799 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்கான ஏக்கர்வரி (1∴12) பில் போடப்பட்டவைகள் ரூபா 86,933 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவைகள் ரூபா 251,814 என ரூபா 164,881 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) ஆண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பணம் (1∴52) வருமானம் ரூபா 2,414,205 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 1,926,286 என ரூபா 487,919 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை நீதி மன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 437,916 எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 2,414,205 என ரூபா 1,976,289 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) பிழையான சீராக்கல்களின் காரணமாக வருட இறுதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப்பண கணக்கின் மீதி ரூபா 1,841,938 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்ததுடன், ஆண்டிற்கான முத்திரை கட்டண வருமானமும் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) முன்னைய ஆண்டுகள் தொடர்பாக மிளாய்வண்டின் போது கிடைத்திருந்த ரூபா 18,444,449 இற்கான நிலுவை முத்திரை கட்டணத்தினை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல் ஆண்டிற்கான முத்திரை கட்டண வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டமையால் ஆண்டிற்கான வருமானம் அதே தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஔ) முன்னைய ஆண்டு தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 565,012 இற்கான ஆதனக் கடன் வட்டி, மீதியை நாட்குறிப்பு இலக்கம் 22 இன் மூலம் குறிப்பிட்ட ஆதனக் கடன் வட்டிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு முத்திரை கட்டண வருமானம் (1∴64) கணக்கு வரவு வைக்கப்பட்டமையால் மீளாய்வாண்டிற்கான முத்திரை கட்டண வருமானம் ரூபா 565,012 இனால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(க) மீளாய்வாண்டிற்கான சம்பள மீளளிப்பு வருமானம் ரூபா 28,278,419 தொகை ஒன்று எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 27,569,964 என ரூபா 708,455 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ங) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை சம்பளம் மீளளிப்பு ரூபா 116,500 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 740,420 என ரூபா 623,920 இனை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ச) நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் பட்டோலையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் ஒதுக்கம் ரூபா 30,270,230 தொகை எனினும், நாட்குறிப்பு இலக்கங்கள் 17 மற்றும் 18 இன் மூலம் நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் என ரூபா 25,868,172 மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவுகள் (309) மற்றும் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலைக் கடன் கொடுத்தோர் ரூபா 4,402,058 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஞ) நிர்மாண வேலை பதிவேட்டின் பிரகாரம் முன்னைய ஆண்டு தொடர்பாக செலுத்த வேண்டியிருந்த ரூபா 5,441,225 தொகையினை மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன் கொடுத்தோரின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ட) மீளாய்வாண்டின் நான்காவது காலாண்டு தொடர்பாக செலுத்த வேண்டியிருந்த முத்திரை வரி ரூபா 30,690 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 355,802 என ரூபா 325,112 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ண) மீளாய்வாண்டின் போது தேசத்தை கட்டி எழுப்பும் வரி மற்றும் பெறுமதி கூட்டிய வரி என முறையே ரூபா 80,080 உம் மற்றும் ரூபா 385,699 உம் செலுத்தப்பட்டிருந்த போதும் அக் கொடுப்பனவுகள் நிதிக் கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(த) மீளாய்வண்டிற்காக உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டியிருந்த தவணைக் கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 1,785,264 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 1,134,353 தொகை என ரூபா 650,911 இனால் குறைவாக எடுக்கப்பட்டிருந்தது.

(ந) வருட இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 4,544,380 இற்கான பங்களிப்புத் தொகை கடன் கொடுத்தோரின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. அத்துடன் ஆண்டிற்கான பங்களிப்புத் தொகையாகிய ரூபா 130,752 இனை ஆண்டிற்கான செலவு ஒன்றென கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ப) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை சம்பளம் மீளளிப்பு என மிகையாக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,487,278 தொகையினை திரண்ட மீதியில் சீராக்கல் மேற்கொள்ளப்படுவதற்கு பதிலாக 24 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் சம்பள மீளளிப்பு கணக்கு வரவு வைக்கப்பட்டமையால் மீளாய்வாண்டிற்கான சம்பள மீளளிப்பு வருமானம் ரூபா 1,487,278 இனால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ம) மீளாய்வாண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்த டிரக்டர் வண்டி ஒன்றின் பெறுமதியை நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் ரூபா 1,463,200 என காட்டப்பட்டிருந்த போதும் கணக்குகளில் அவை ரூபா 1,100,000 என ரூபா 363,200 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. அதே போல் அப் பெறுமதியினை மீளாய்வாண்டிற்காக மூலதன உதவி மற்றும் மூலதன செலவுகள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.2 எதிர்பாராத பொறுப்புக்கள்

-----------------------------------------

பிரதேச சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு தொகை செலுத்த வேண்டிய ஊழியர்கள் தொடர்பாக சபையினால் ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை முறைப்படி செலுத்தப்படாமையால் மீளாய்வாண்டு இறுதி வரை அந் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 4,544,380 ஆக காணப்பட்டது.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுபாட்டு கணக்குகள்

--------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக ஆரம்ப மீதி, பில் போடப்படல், பெறுவனவுகள் மற்றும் இறுதி மீதியின் கீழ் 20 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் குறிப்பிட்ட பதிவேட்டின் பிரகாரம் நேரொத்த பெறுமதிகளுக்கிடையே ரூபா 11,636,879 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டன.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 92,745,492 ஆக காணப்பட்டதுடன் அது தொடர்பாக பிழையற்ற காலப் பகுப்பாய்வு சமர்பிக்கப்படவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 42,782,150 ஆக காணப்பட்டதுடன், அது தொடர்பாக பிழையற்ற காலப் பகுப்பாய்வு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 58,494,355 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விரிவான பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

1.3.6 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 11 சந்தர்ப்பங்களில் திரண்ட நிதியத்திற்கு ரூபா 12,485,360 தொகையொன்று சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அதற்காக முறையான அங்கீகாரம் ஒன்று பெற்றிருக்கவில்லை. மேலும், அவ்வாறு சீராக்கல் மேற் கொள்ளப்பட்டிருந்த பெறுமதிகள் அமைக்கப்பட்ட முறையினை இனங்கண்டிருக்கவில்லை.

(ஆ) 06 கணக்கு விடயங்கள் மற்றும் தொடர்புடைய பட்டோலைகளின் பிரகாரம் பெறுமதிகளில் இணக்கமின்மைகள் சரி செய்வதற்காக ரூபா 4,446,951 இற்கான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், அம்மீதி அமைக்கப்பட்ட விதத்தினை இனங்கண்டிருக்கவில்லை. மேலும், அங்கீகாரம் இன்றி நாட்குறிப்புகளின் மூலம் 6 சந்தர்ப்பங்களில் பேரேட்டுக் கணக்குகளுடன் இச் சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

2 நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 24,172,360 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,827,498 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 19,344,862 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது. நிதி விளைவிற்கு ரூபா 59,294,493 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 47,614,584 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 35,852,269 வரை அதிகரித்திருந்தது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

--------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானம் ஆகிய ரூபா 95,350,965 இல் நூற்றிற்கு 81 ஆகிய ரூபா 77,725,444 உருவாக்கிய வருமானம் அல்லாத நீதி மன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம் சம்பள மீளளிப்புக்கள் ஆகிய படிகள் தன்மையுள்ள பெறுவனவுகள் அடங்கியுள்ளன. அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 59,294,493 இற்கான முழுத் தொகையும் கமநெகும, மகநெகும, வயம்ப புபுது போன்ற மூலங்கள் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகள் அடங்கியுள்ளன.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவாகிய ரூபா 71,178,605 இல் நூற்றிற்கு 53 ஆகிய ரூபா 37,532,736 தனிப்பட்ட சம்பள செலவு ஆக காணப்பட்டதுடன் அவற்றில் நூற்றிற்கு 73 ஆகிய ரூபா 27,569,964 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரிடம் கிடைத்து வேறு வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் மூலதன செலவாகிய ரூபா 47,614,584 இல் நூற்றிற்கு 57 ஆகிய ரூபா 27,053,043 தொகை மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் மீதி நூற்றிற்கு 43 ஆகிய ரூபா 20,561,541 தொகை கமநெகும, மகநெகும, வயம்ப புபுது போன்ற மூலங்கள் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகள் அடங்கியுள்ளன.

2.3 வருமான நிருவாகம்

--------------------------------

2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

-----------------------------------------------------------------

வியாபார அனுமதிப்பத்திரம், வர்த்தகவரி கடை வாடகை, குத்தகை ஆகிய வருமானங்கள் வெளிக்களத்தில் சேகரிப்பதற்காக சட்டரீதியான ஏற்பாடுகள் விதித்தில்லாத போதிலும் சபையின் வருமானத்தை சேகரிப்பாளர்களினால் ஆண்டு பூராகவும் வீதவரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரம் அவ்வாறான வருமானம் வெளிக் களத்தில் சேகரிக்கப்பட்டிருந்தது.

2.3.2 வீதவரி

----------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 3,972,784 ஆக காணப்பட்டதுடன் வருடத்திற்கான பில் போடப்பட்டவை ரூபா 1,896,116 ஆகும். 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 32 – 42 வரையின் விதிகளின் பிரகாரம் காலாண்டு அடிப்படையில் நிலுவைபட்டியல் தயாரிக்கப்பட்டு, குறிப்பிட்ட அறிவித்தல் வழங்கப்பட்ட பின்னர் ஆதனங்கள் தடைசெய்து நிலுவை வீதவரி அறவிடும் செயற்பாடு அமுல் நடத்தப்பட வேண்டும் எனினும் சபையினால் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3.3 கடை வாடகை

----------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்கு சொந்தமான குபல்கட்டே உப அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் சபையினால் 2007, 2008 ஆண்டுகளின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த 07 அங்காடிக் கடைகள் தற்போது வாடகையாளர்களினால் நிரந்தர கட்டடமாக மாற்றப்பட்டிருந்தது. சபையினால் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக கவனம் செலுத்திருக்கவில்லை.

(ஆ) கொகரல்ல உப அலுவலக அதிகார பிரதேசத்தை சேர்ந்த “ கொஸ்கலே துரு செவன” என அழைக்கப்படும் காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 30 கடைகளில் இருந்து மாதாந்தம் ரூபா 900 வாடகை அறவிடப்பட்டிருந்தது. அக் கடைகளின் வருடாந்த வாடகை ரூபா 324,000 ஆகும். சபையின் உப அலுவலகத்தினால் மேற்கூறிய வாடகைக்காக பில் போடல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அறவிடப்பட்டிருந்த வாடகையை மாத்திரம் பதிவு செய்திருந்தார்கள். இதன் காரணமாக குறிப்பிட்ட தினத்தில் பில் போடப்படல், அறவீடுகள் மற்றும் நிலுவை வாடகை பற்றிய தகவல்கள் போன்றவற்றை பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. 2012 மற்றும் 2013 ஆண்டுகள் தொடர்பாக முறையே ரூபா 221,100 உம் மற்றும் ரூபா 129,600 உம் நிலுவையாக காணப்பட்டது.

2.3.4 முற்கொடுப்பனவு பணம்

--------------------------------------

மெல்சிறிபுர பஸ் தரிப்பிடத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 04 கடைகள் மற்றும் நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டிருந்த 03 கடைகள் முற்கொடுப்பனவு அடிப்படையில் வாடகைக்கு கொடுப்பதற்கு 2013 ஏப்ரல் 08 திகதி ரூபா 8,565,263 இற்கான குறைந்த கூறுவிலை கோரப்பட்டிருந்தது. இந்த ஏழு கடைகளில் கூட்டுப்பெறுமதி ரூபா 8,565,859 தொகைக்கு டெண்டர் சமர்பிக்கப்பட்டிருந்தது. 07 ஆம் இலக்க கடையினால் மாத்திரம் ரூபா 300,000 அறவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் டெண்டர் பெறுமதியில் ரூபா 8,265,859 நிலுவையாக காணப்பட்டதுடன் முன்னர் நிர்மானிக்கப்பட்டிருந்த 04 கடைகளுக்காக வாடகை பில் போடப்படல் அல்லது நிர்மாணிக்கத் திட்டமிட்டிருந்த 03 கடைகளும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு டென்டர் நிபந்தனையின் பிரகாரம் பணம் செலுத்தத் தவறுபவர்கள் தொடர்பாக சபையினால் முறையான நடவடிக்கைகள் ஏதும் எடுத்திருக்கவில்லை.

2.3.5 வர்த்தக வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரம்

--------------------------------------------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு கைத்தொழில் மற்றும் வியாபாரங்கள் பற்றிய பட்டியல் தயாரிக்கப்பட்டு செயலாளருக்கு சமர்பிக்கப்பட்டு சபையினால் விதிக்கப்பட்டிருந்த வரியை கைத்தொழிலாளர்கள் மற்றும் வியாபாரிகளினால் 07 நாட்களில் செலுத்தும் படி அறிவித்தல் அனுப்பியிருக்கவில்லை.

2.3.6 நீர் வருமானம்

----------------------

ஹீரிபிடிய உப அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் செயற்படும் நீர் செயற்திட்டத்தின் மூலம் 122 நீர் நுகர்வோர்களுக்கு நீர் வழங்கப்பட்டிருந்தது. அத்துடன், நீர் தொட்டிகளுக்கு வழங்கப்படும் நீர் மற்றும் தொட்டியில் இருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவினை இனங்

காண்பதற்காக நீர்மானிகள் காணப்படாமையால் விநியோகிக்கப்படும் நீர் அலகுகள் மற்றும் பில் போடப்பட்ட நீர் அலகுகள் பற்றிய இணக்கம் ஒன்று மேற்கொள்வதற்கு

முடியாதிருந்தது. மீளாய்வாண்டின் போது நீர் பில் போடப்படல் ரூபா 596,983 ஆகக் காணப்பட்டதுடன், 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 116,488 ஆகும். அந்நிலுவையில் வைத்தியசாலைக்கு நீர் வழங்கல் தொடர்பான ரூபா 72,642 நிலுவையும் காணப்படுகின்றது.

2.3.7 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 501,958 ஆகும்.

2.3.8 தொலைபேசி செலுத்துதல் டவர் கட்டணம்

----------------------------------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்த தொலைபேசி செலுத்துதல் டவர்களின் எண்ணிக்கை 18 ஆக காணப்பட்டதுடன் 2011, 2012 மற்றும் 2013 ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் முறையே ரூபா 228,500, ரூபா 227,715 மற்றும் ரூபா 222,375 ஆக காணப்பட்டதுடன் அவற்றை அறவீடு செய்திருக்கவில்லை.

2.3.9 இறைச்சிக்கடை வாடகை

----------------------------------------

குறைந்த விலை கூறல் ரூபா 451,000 இன் பிரகாரம் கேள்வி கோரப்பட்டிருந்த மெல்சிறிபுர வாராந்த சந்தை மாட்டிறைச்சி கடை, இறைச்சி / மீன் கடைகள் அடிப்படை நியமக் குறியீடுகளுக்கு இணக்கமின்மை காரணமாக 2011 ஆம் ஆண்டிலிருந்து கேள்வி கோரப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ஆகக் குறைந்த கூறுவிலையின் பிரகாரம் சபைக்கு உழைக்கக் கூடியதாக இருந்த சுமார் ரூபா 1,353,300 வருமானம் ஒன்றினை இழந்துள்ளது.

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 செயலாற்றுகை

-----------------------

சபையினால் மீளாய்வாண்டின் போது மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்த ரூபா 1,075,000 பெறுமதியான 05 நலன்புரி விடயங்கள் போதியளவினதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் ரூபா 1,800,000 ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்த 08 நலன்புரி விடயங்கள் முற்றாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ திறமையின்மை

-----------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் 2009 – 2011 காலப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த 560 கட்டட விண்ணப்பங்கள் காணப்பட்ட போதும் 29 இணக்கச் சான்றிதழ் மாத்திரமே வழங்கியிருந்தது. 531 விண்ணப்பங்களுக்காக இணக்கச் சான்றிதழ் பெற்றிருக்காமை அல்லது கட்டட அனுமதிப்பத்திரங்களின் கால நீடிப்புக்கள் பெற்றுக் கொள்ளாமை பற்றி சபை நடவடிக்கைகள் ஏதும் எடுத்திருக்கவில்லை. அந்த கட்டடங்கள்

அனைத்தும் நிர்மாணிக்கப்பட்டிருந்தால் சபையின் துனை விதிகளின் பிரகாரம் ரூபா 106,200 இற்கான கட்டட இணக்கச் சான்றிதழ் வருமானத்தினை உழைக்கக் கூடியதாக இருந்தது. அத்துடன் கட்டட அனுமதிப் பத்திரத்தின் காலத்தை நீடிப்பதற்கான கட்டணம் பற்றிய ஏற்பாடுகள் சபையினால் ஏற்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) 2000 ஆண்டளவில் துண்டுகளாக பிரித்து விற்பனவு செய்யப்பட்டிருந்த ''கனேவத்த உடுவெல்லேபிடிய'' என அழைக்கப்படும் காணியின் சுமார் 15 பர்சஸ்கள் காணிப் பகுதி சபைக்கு சாட்டுவதற்காக நடவடிக்கை எடுப்பதாக அறிவித்திருந்த போதும், இந்த காணித் துண்டுகளுக்காக காணி உறுதி ஒன்று பெற்றுக் கொள்வதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. தற்போது அக் காணிப் பகுதிகளில் வெளி நபர்கள் அங்கீகாரம் இன்றி குடியேறியுள்ளனர் என அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டிற்காக உரிமையினை வாடகை கொடுப்பதற்காக குபுக்கெடே பகுதியில் மீன் பலகை ஒன்று நடத்துவதற்காக சமர்பித்திருந்த ரூபா 61,200 இற்கான கேள்வியினை அங்கீகரித்திருந்ததுடன் அதனை வாடகையாளருக்கு 2012 அக்டோபர் 15 திகதி அறிவித்திருத்த போதும் வாடகையாளருடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. குறிப்பிட்ட வாடகை தொகையை அறவீடு செய்திருக்கவில்லை. எனினும் குபுக்கெடேயில் காணப்படும் மாதாந்த வாடகை ரூபா 900 வீதமான சபைக்கு சொந்தமான அங்காடி கடைகள் இரண்டில் மீன் பலகை நடத்தப்பட்டுள்ளது என வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக சபையினால் நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. அதே போல் 2013 ஏப்ரல் 09 திகதி சபை தீர்மாண இலக்கம் 4(13)1 இன் பிரகாரம் குபுக்கெடே பகுதியில் மீன் பலகை நடத்துவதை டென்டர் பண்ணாமல் அங்காடிக் கடைகள் இலக்கம் 1 மற்றும் 2 ஆகிய இடங்களில் மீன் வியாபாரம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

3.3 சபையினால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்குகள்

---

(அ). ஹிரிபிடிய மாட்டிறைச்சி கடைக்காக 2008 ஆண்டின் போது அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 97,018 இற்கான நிலுவைக்காக ஆதனங்களை தடைசெய்து பணத்தை அறவீடு செய்வதற்காக இலக்கம் 2011.'.8.'.5.'.11858.'.ஆ வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக வழக்குகள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த போதும், குறிப்பிட்ட பணம் அறவிடப்பட்டதாக அவதானிக்கப்படவில்லை. அத்துடன் குறிப்பிட்ட வழக்கு கோவை கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

(ஆ). ஹீரிபிடிய மீன் கடை தொடர்பாக 2008 ஆண்டிற்காக அறவிடப்படவேண்டியிருந்த ரூபா 113,912 இற்கான நிலுவையை அறவீடு செய்வதற்காக இலக்கம் 2011/8/5/11803/M வழக்கு மீளாய்வாண்டு இறுதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அதற்கான உரிய காரணத்தை வழக்கு பதிவேட்டின் பிரகாரம் அவதானிக்கப்படவில்லை.

(இ). மெல்சிரிபுர வாராந்த சந்தையில் 2005 மற்றும் 2006 ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய நிலுவையை அறவீடு செய்வதற்காக இலக்கம் 2010/9/27/10509/M மற்றும் இலக்கம் 2010/9/27/10521 கொண்ட வழக்குகள் தொடர்பாக ஆதனத்தை தடை செய்து பணத்தை அறவீடு செய்வதற்கு தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பதாக வழக்கு பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அந்நிலுவையினை அறவீடு செய்தல் அல்லது வழக்கு தீர்ப்பின் பிரகாரம் எடுக்கப்பட்டுள்ள முன் செயல் நடவடிக்கைகள் எவை என இனங்காண முடியவில்லை.

3.4 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளுராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சில் இருந்து பெற்றிருந்த ரூபா 1,000,000 ஏற்பாடுகளின் கீழ் சபையினால் முன்பள்ளி உபகரணங்கள் கொள்வனவு செய்யும் போது குறைந்த விலை சமர்பித்திருந்த நிறுவனத்தின் கூறுவிலைகளை இரத்து செய்து கூடிய விலை சமர்பித்திருந்த நிறுவனத்தின் பண்டங்கள் தரமானவை என குறிப்பிட்டு அந் நிறுவனத்தில் இருந்து பண்டங்கள் கொள்வனவு செய்வதற்காக சபை விதப்புரைந்துள்ளது. இதன் காரமாக சபைக்கு ரூபா 197,600 குறைந்தத விலையை விட மிகையாக செலுத்த நேரிட்டுள்ளது.

(ஆ) இலங்கை குடியரசின் தாபனக் கோவை அத்தியாயம் ஓஜஏ பிரிவு 4.3 இன் பிரகாரம் நகர அதிகாரசபை எல்லையில் மேற்கொள்ளப்படும் பிரயாணங்களுக்காக இணைந்த படிகள் செலுத்த முடியாது எனினும் சபை தீர்மானம் ஒன்றின் பிரகாரம் மாதாந்தம் 15 முழு நாட்கள் அல்லது ஒரு நாளைக்கு அரைவாசி வீதம் 30 நாட்களுக்கும் இணைந்த படிகள் வழங்குவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் சபையின் 07 சாரதிகளினால் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கடைடையாற்றிய போதும் ரூபா 175 வீதம் அரை இணைந்த படிகள் ஒரு மாதத்திற்கு 30 நாட்களும் பெற்றிருந்தார்கள். அவ்வாறு 2013 ஆண்டின் போது சாரதிகளின் இணைந்த படியாக ரூபா 207,101 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

3.5 செயற்திட்டங்கள் அமுல் நடத்துதல்

-----------------------------------------------------------

மயிலமடம நீர் திட்டம் தொடர்பாக 2011 ஆண்டின் போது ரூபா 487,486 தொகை ஒன்று செலவிடப்பட்டு நீர் மோட்டார் அறை மற்றும் நீர் தொட்டிக்கான தூண்கள் கட்டும் வேலை பூர்த்தி செய்திருந்த போதும் செயற்திட்டத்தின் ஏனைய வேலைகளை பூர்த்தி செய்து பிரதேச மக்களுக்கு நீர் வழங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3.6 திண்மக் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம்

---------------------------------------------------------------------------

சபையின் அதிகார பிரதேசத்தில் சேகரமாகும் கழிவுப் பொருட்கள் தொடர்பாக கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ செயற்திட்டமொன்று நிர்மாணிப்பதற்காக காணிப் பகுதி ஒன்று சபையினால் இனங் கண்டிருக்கவில்லை. அத்துடன், குப்பைகளை குழியில் போடும் முறை ஒன்றினை சபை கடைபிடித்திருந்தது.

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

---------------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

--------------------------------

3 மீண்டுவரும் செலவு விடயங்களின் கீழ் ரூபா 11,004,000 மிகைத்தல் காணப்பட்டதுடன் மூலதனச் செலவுகளின் கீழ் ரூபா 3,296,000 இற்கான ஏற்பாடுகளை மிகைத்து செலவிடப்பட்டிருந்தது. அதே போல் சபை உருவாக்கிய வருமானத்தின் கீழ் மதிப்பிட்டு வருமான ரூபா 19,025,000 காணப்பட்டதுடன் உள்ளவாறான வருமானம் ரூபா 12,663,000 ஆகும்.

5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) நிதிக் கட்டுப்பாடு

(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஊ) ஒப்பந்த நிருவாகம்